அன்புடையீர்:

வணக்கம். இந்நகராட்சியின் அக்டோபர் 2018–ம் மாத அவசரக்கூட்டம் வருகிற **17.10.2018** அன்று காலை **11.00** மணியளவில் தனி அலுவலர், அவர்களின் தலைமையில் கூட்டம் நடைபெறுவதால், மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப் பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

**1. 07.09.2018** நாளைய **1036** எண்ணிட்ட இந்நகராட்சி மன்றத் தீர்மானத்தில் அரசாணை எம்.ஸ்,எண் **73** , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.07.2018** மற்றும் அரசாணை எம்.எஸ்.எண் **76**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**26.07.2018**ல் அனுமதிக்கப்பட்டவாறு சொத்துவரி சீராய்வு **01.04.2018** முதல் அமலாக்கத்தக்கவாறு **31.03.2017**க்கு முன்னர் வரி விதிக்கப்பட்ட இனங்களுக்கு கீழ்கண்டவாறு உச்ச விழுக்காடு நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| குடியிருப்பு கட்டிடங்கள் | 50 % /மிகாமல் |
| குடியிருப்பு அல்லாத | 100% மிகாமல் |

மேலும் இந்நகராட்சியில் உள்ள **36** வார்டுகளிலும் அனைத்து பகுதிகளும் முறையே **3** மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் தெருக்களில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு சொத்து வரி விதிக்க சதுர அடிக்கு அடிப்படை மதிப்பு கீழ் கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டது.

| மண்டலம் | 01.04.2018 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பு ரூ. |
|---|---|
| A மண்டலம் | 2.70 |
| B மண்டலம் | 2.25 |
| C மண்டலம் | 1.80 |

மேலும் A, B மற்றும் C மண்டலத்தில் அமைந்துள்ள வார்டு மற்றும் தெருக்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

| மண்டலம் | வார்டு எண் | மொத்தம் |
|---|---|---|
| மண்டலம் A | 4,5,8,9,10,11,12,13,14,15,16,17,18,19,20,22,30,31,34, | 19 வார்டுகள் |
| மண்டலம் B | 1,3,6,7,21,23,24,25,26,33 | 10 வார்டுகள் |
| மண்டலம் C | 2,27,28,29,32,35,36 | 7 வார்டுகள் |
| | மொத்தம் | 36 வார்டுகள் |

இவ்விவரங்கள் 11.09.2018 நாளைய தினத்தந்தி நாளிதழில் பொதுமக்களின் கவனத்திற்கு அறிவிப்பு செய்தும் இம்மொழிவின் மீது ஆட்சேபனைகள் இருப்பின் 10.10.2018 (30 நாட்களுக்குள் ) நகராட்சி அலுவலகத்தில் தாக்கல் செய்யலாம் என்று செய்த அறிவிப்புற்கு அக்காலம் முடிய எவ்வித ஆட்சேபனைகளும் பொதுமக்களிடமிருந்து பெறப்படவில்லை. எனவே 07.09.2018ம் நாளைய 1036 எண் கொண்ட திர்மானத்தில் தீர்மானித்த படி சொத்துவரி சீராய்விற்கான சதுர அடி அடிப்படையில் மதிப்பினையும் இந்த மூன்று மண்டலங்களுக்குள் அடங்கும் வார்டுகளின் கீழ் உள்ள தெருக்களில் நிர்ணயம் செய்யப்பட்ட சதுர அடிக்கான வாடகை மதிப்பினை 01.04.2018 முதல் அமலாக்கவும் ஊர்ஜிதம் செய்ய தனி அலுவலர் முன் வைக்கப்படுகிறது.

**அலுவவக குறிப்பு:ஊர்ஜிதம் செய்யலாம்.**

**(ந.க.எண்:– ச11/7237/2018)**

**தீர்மானம் எண் :1068 ஊர்ஜிதம் செய்யப்படுகிறது.**

**2.** உதகமண்டலம் நகராட்சிக்கு 2018–2019,2019–2020,2020–2021 ஆகிய மூன்று ஆண்டிற்கு நகராட்சி நிர்வக ஆணையர் அவர்களது செயல்முறை உத்தரவு K.Dis.No.26356/P3/2018 நாள் 05.10.2018ன் படி 150 துப்புரவு பணியாளர்கள் ஆள் சப்ளை மூலம் (Out sourcing) மூலம் நியமனம் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2018–2019 ஆம் ஆண்டிற்கான சந்தை நிலவரகூலி குறைந்தப்பட்சம் ஊதியம் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 571 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்துடன் ESI-1.75% GPF12% நிர்வாக செலவினம் 10% ஆக மொத்தம் நபர் ஒருவருக்கு ரூ.705 வீதம் 150 நபர்களுக்கு ஒரு ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ.4.00,00,000 (ரூபாய் நான்கு கோடி மட்டும்)
மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம் 2018–2019ம் ஆண்டு முதல் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் பெறவும் அதற்கான தொகைக்கும் மன்ற அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.10891/2015/H1)

**தீர்மானம் எண் :1069 அனுமதி வழங்கப்படுகிறது.**

3. உதகமண்டலம் நகராட்சி 30.67 ச.கி.மீ பரப்பளவு கொண்டுள்ளது. சிறப்பு நிலை நகராட்சியாகவும், 36 வார்டுகளையும் கொண்டுள்ளது. நகருக்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் பார்சன்று வேலி தலைமை நிரேந்து நிலையம் நகரம் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது. நகரில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அன்றாடம் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் சீராக வழங்கப்படுவதை கண்காணிக்கவும் நகராட்சி முலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் போன்றவற்றை நேராய்வு செய்ய வேண்டியுள்ளது. மேலும் இந்நகராட்சி மலை பிரதேசமாகவும், சுற்றுலா ஸ்தலமாக உள்ளதாலும் பொதுமக்கள் மற்றும் சுற்றலா பயணிகளுக்கு அன்றாட தேவையான அத்தியவசிய பணிகளை கவனிக்க பல்வேறு பகுதிகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும் நகராட்சி பொறியாளருக்கு தனியாக வாகன இல்லாததால், மேற்கண்ட பணிகளை கவனிக்க மிகவும் சிரமமாக உள்ளது. எனவே நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு புதியதாக ஈப்பு வாகனம் Bolerozlx வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.9.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொதுநிதியின் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :1070அனுமதி வழங்கப்படுகிறது.**

4. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.15981/2016/எச்1, நாள்:19/04/2017 தேதிய கடிதத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படியும் நிலைகளின் படியும் நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் நகராட்சி அரசாணை எண்.719 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20–07–1987 ன் படி தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.1260 கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக துறை நாள்:30–08–1983ன் படி கூடுதலாக இரண்டு உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தினை உருவாக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.



| வரிசை எண் | தற்போதுள்ள பணியிட விவரம் | வகுப்பு | அரசாணை எண்.1260 கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக துறை நாள்:30–08–1983ன் படி கூடுதலாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | பணியிடங்களின் எண்ணிக்கை | வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | மேலாளர் | I | – | – | – |
| 2 | வருவாய் அலுவலர் | IA | – | – | – |
| 3 | கணக்கர் | II | – | – | – |
| 4 | உதவி வருவாய் அலுவலர் | IV | உதவி வருவாய் அலுவலர் | 2 | IV |

ஊதிய விவரம் :

| வ.எண் | பணியிட விவரம் | தற்போது பெற்று வரும் ஊதிய விகிதம் | நிலை உயர்த்தப்பட்டால் வழங்கப்ப வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 9300–34800 + 5100 | 9300–34800+5100 GP |
| 2 | வருவாய் அலுவலர் | 9300–34800+4800 | 9300–34800+4800 GP |
| 3 | கணக்கர் | 9300–34800+4300 | 9300–34800+4300 GP |
| 4 | உதவி வருவாய் அலுவலர் | 9300–34800+4200 | 9300–34800+4200 GP |

மேலும் இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக இருப்பதாலும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் வருவாய் அதிகரித்து கொண்டு வருவதாலும், இந்நகராட்சிக்கு மேலும் இரண்டு

உதவி வருவாய் அலுவலர் பணியிடம் அரசாணையின் படி அவசியம் தேவைப்படுகிறது. எனவே, மேலும் இரண்டு உதவி வருவாய் அலுவலர் பணியிடம் வகுப்பு IV ல் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண் :1071 அனுமதி வழங்கப்படுகிறது.**

**(ஒம்) பா.நாராணயன்**
**தனி அலுவலர்,**
**உதகமண்டலம் நகராட்சி.**

## உதகமண்டலம் நகராட்சி

## நகர் மன்ற தீர்மான எண்.1071 நாள்.17–10–2018–ன் உண்மை நகல்

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.15981/2016/எச்1, நாள்:19/04/2017 தேதிய கடிதத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படியும் நிலைகளின் படியும் நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் நகராட்சி அரசாணை எண்.719 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 20–07–1987 ன் படி தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.1260 கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக துறை நாள்:30–08–1983ன் படி கூடுதலாக இரண்டு உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தினை உருவாக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | தற்போதுள்ள பணியிட விவரம் | வகுப்பு | அரசாணை எண்.1260 கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாக துறை நாள்:30–08–1983ன் படி கூடுதலாக உருவாக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | பணியிடங் களின் எண்ணிக் கை | வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | மேலாளர் | I | – | – | – |
| 2 | வருவாய் அலுவலர் | IA | – | – | – |
| 3 | கணக்கர் | II | – | – | – |
| 4 | உதவி வருவாய் அலுவலர் | IV | உதவி வருவாய் அலுவலர் | 2 | IV |

ஊதிய விவரம் :

| வ.எண் | பணியிட விவரம் | தற்போது பெற்று வரும் ஊதிய விகிதம் | நிலை உயர்த்தப்பட்டால் வழங்கப்ப வேண்டிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் | 9300–34800 + 5100 | 9300–34800+5100 GP |
| 2 | வருவாய் அலுவலர் | 9300–34800+4800 | 9300–34800+4800 GP |
| 3 | கணக்கர் | 9300–34800+4300 | 9300–34800+4300 GP |
| 4 | உதவி வருவாய் அலுவலர் | 9300–34800+4200 | 9300–34800+4200 GP |

மேலும் இந்நகராட்சி சிறப்பு நிலை நகராட்சியாக இருப்பதாலும், ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியின் வருவாய் அதிகரித்து கொண்டு வருவதாலும், இந்நகராட்சிக்கு மேலும் இரண்டு உதவி வருவாய் அலுவலர் பணியிடம் அரசாணையின் படி அவசியம் தேவைப்படுகிறது. எனவே, மேலும் இரண்டு உதவி வருவாய் அலுவலர் பணியிடம் வகுப்பு IV ல் தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண் :1071 அனுமதி வழங்கப்படுகிறது.**

**தனி அலுவலர், மற்றும்**
**ஆணையாளர்**
**உதகமண்டலம் நகராட்சி.**